அ.வ.எண்: 84/2023 நாள்: 08.10.2025

வா.சா.1 – சின்னையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு நான் கூடுதல் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 411/5 அரசு ஆவணங்களில் பொதுப் பாதை என்று தாக்கல் ஆகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 411/5 ஐ தாவா வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் 411/5 வழியாகத்தான் நான் என் வீட்டிற்கு செல்கிறேன் என்றால் சரியல்ல வாய்க்கால் வழியாக செல்கிறேன். மேற்படி வாய்க்கால் அமைந்துள்ள இடத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை.
2. நான் வசதியுரிமை சட்டத்தின் கீழ் பாதை கோரியுள்ள இடமானது ஏற்கனவே பாதையாக பயன்படுத்தப்பட்டது என்பதற்கான ஆவணங்களை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது சம்பந்தமாக என்ன ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் பாதை வேண்டும் என்று கோரி பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:15:17 +0530

அனுப்பவில்லை என்றால் சரியல்ல அனுப்பி உள்ளேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை.

3. தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்வது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல புகார் அளித்துள்ளேன். வாசாஆ.3 ஆவணமான புகார் என்பது தாவா சொத்தான பாதை சம்பந்தமாக இல்லை என்றும் கண்மாயில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதை தடுக்கக்கூடிய புகார் என்றும் சொன்னால் சரியல்ல. (சாட்சியிடம் வாசாஆ.3 ஆவணம் காட்டப்பட்டது சாட்சி தனக்கு படிக்க தெரியாது என்று சொன்னார்). மேற்படி புகாரில் கண்மாய் கரை வழியாக உள்ள பாதையை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கம்பி வேலி அமைத்துள்ளனர் என்று குறிப்பிட்டு இருந்தால் அது தவறான புகார் என்று சொன்னால் அது சரியல்ல.

4. என் புகாரில் எந்த இடத்திலும் தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நத்தம் காலத்தின் SFI ஆவணத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் பார்த்ததில்லை. மேற்படி SFI ஆவணத்தில் தாவா சொத்துக்கள் அனைத்தும் தனி நபருக்கு பாத்தியப்பட்ட பட்டா இடங்களாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் நத்தம் காலத்தில் அரசு புறம்போக்காக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் எதையும்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:15:23 +0530

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்களை பாதையாக பயன்படுத்தப்படுகிறது என்பது மேலும் மாற்று பாதை இல்லை என்பதையும் நி்ருபிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார்.

5. மேற்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை எப்போது எந்த தேதியில் வந்து பார்வையிட்டார் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. நீதிமன்ற ஆணையர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் எப்பொழுது யார் கம்பி வேலி அமைத்தார்கள் என்றால் பூங்கோதை, முருகேசன் மற்றும் மணிகண்டன் ஆகிய மூவர்தான் அடைத்தார்கள், ராஜேந்திரன் என்பவர் அங்கு வரவில்லை, இவர்களை தவிர வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் வேலையாட்கள் சுமார் 4 பேர்கள் இருந்தார்கள். எந்த தேதியில் மேற்படி வேலி அமைத்தார்கள் என்றால் தேதி சரியாக நினைவில் இல்லை, சுமார் 2 வருடங்கள் இருக்கும். நான் கோரியுள்ள பாதையை என் வீட்டில் உள்ளவர்கள் தவிர வேறு யாரும் பயன்படுத்த மாட்டார்கள் என்றால் சரிதான் அங்கு வேறு வீடுகள் இல்லை.

6. கிராமத்தில் உள்ளவர்களை மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக விசாரித்தால் தாவா சொத்தில் பாதை உள்ளதா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். என் தரப்பில் கிராமத்தில் உள்ளவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:15:28 +0530

தயாராக உள்ளேன். தாவா வழக்கில் நான் மணிகண்டன் மற்றும் முருகேசன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராஜேந்திரன் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றும் அவரை மட்டும் தான் நான் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றும் சொன்னால் ராஜேந்திரனின் மகன் தான் என்னிடம் பிரச்சனை செய்தார். பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நடவடிக்கை எடுத்துள்ளேன்.

7. மேற்படி பட்டாவை ரத்து செய்ய எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா 2ம் இலக்க சொத்தில் 30 வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி வசித்து வருகிறேன் என்பது நிரூபிப்பதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு வீண் தொந்தரவு அளிப்பதற்காக பொய்யான சங்கதிகளை கொண்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வசதி உரிமை சட்டத்தின் கீழ் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் அரசையும் மற்ற பட்டாதாரர்களையும் சேர்க்காததால் தாவா வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல

<u>மறுவிசாரணை .</u>இல்லை.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:15:34 +0530